தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 68/ந/2022
நாள். 28.06.2022

திரு.K.பாலாஜி,
செங்கல்பட்டு. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
செங்கல்பட்டு நகராட்சி. – எதிர்மனுதாரர்

செங்கல்பட்டு மாவட்டம் 603 001, செங்கல்பட்டு நகரம், பெரிய மணியக்கார தெரு, கதவு எண். 11/97, என்ற முகவரியில் வசிக்கும் திரு.K.பாலாஜி, என்பவரின் 29.05.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.05.2022 அன்று பெறப்பட்டு 068/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

செங்கல்பட்டு மாவட்டம் 603 001, செங்கல்பட்டு நகரம், பெரிய மணியக்கார தெரு, கதவு எண். 11/97, என்ற முகவரியில் வசிக்கும் திரு.K.பாலாஜி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“செங்கல்பட்டு நகரம் மற்றும் செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட 17வது வார்டில் அடங்கிய பெரிய மணியக்கார தெருவில், புதிய குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க ரூ.1,55,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரம் மட்டும்) திட்ட மதிப்பீடு தயார் செய்து கடந்த 11.04.2022 அன்று நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனைத்தொடர்ந்து அதற்கான ஒப்பந்தப்புள்ளி கடந்த 27.04.2022 அன்று பெறப்பட்ட நிலையில், இந்தப் ஒப்பந்தப்புள்ளி விவரத்தை 07.05.2022 அன்று அஜெண்டா/ நிகழ்ச்சி நிரல் மூலம் நகராட்சித் தலைவி ஒப்புதலுடன் வெளியிடப்பட்டது. இந்த அஜெண்டா / நிகழ்ச்சி நிரலை 11.05.2022 அன்று தான் 17வது வார்டில் அடங்கிய பெரிய மணியக்கார தெருவில், புதிய குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க ரூ.1,55,000/– என்ற விபரம் பொருள்–7 வரிசை எண்–1 மூலம் நகராட்சி கூட்டம் நடைபெற்று இறுதி செய்ய வேண்டிய நிலையில், அந்த அஜெண்டாவின் தீர்மானம் இறுதி செய்யப்படாத நிலையில் எப்படி ஒரு குறிப்பிட்ட ஒப்பந்ததாரர் தற்போதே ஏல ஒப்பந்த பணி ஆணை பெறாமலே! அந்தப் பணியை தரம் குறைவாக பொதுமக்கள் நீண்ட நாள்

பயன் பெற முடியாத அளவுக்கு அரை அடியில் குழாயை அமைத்துவிட்டு அதிகாரிகளின் துணையோடு முறைகேடாக தற்போதே குடிநீர் குழாய் பகிர்மான பணியை முடித்துவிட்டு வரும் நாட்களில் அந்தப் பணி ஆணையை சட்டத்திற்கு புறம்பாக நகராட்சியின் ஆணையர் மற்றும் இதர அதிகாரிகள் துணையோடு பெறவுள்ளார். இந்த முறைகேடு சம்பந்தமாக பலமுறை வாய்வழியாக புகார் அளித்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் ஆய்வு மேற்கொள்ள நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

மேலும் விசாரித்ததில் அந்த இடத்திற்கான தற்போது ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் போடப்பட்டு கொண்டிருக்கும் தரமற்ற சாலையின் ஒப்பந்ததாரரும், தற்போது பணி ஆணை பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக 17வது வார்டில் புதிய குடிநீர் குழாய் பகிர்மான திட்டத்தை முறைகேடாக தரமற்ற முறையில் போட்ட ஒப்பந்ததாரரும், ஒருவருக்கொருவர் உதவியுடன் நகராட்சி அதிகாரிகளுக்கு கையூட்டு அளித்து தங்களுக்கு ஏற்றவாறு ஆணையை பெற்றுக் கொள்கிறார்கள்.

எனவே, ஐயா அவர்கள் ஒப்பந்தம் இறுதி செய்யப்படாத நிலையில், பணியாணை பெறாமல் செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட 17வது வார்டில் அடங்கிய பெரிய மணியக்கார தெருவில் புதிதாக வெறும் அரையடியில் போடப்பட்ட தரமற்ற குடிநீர் பகிர்மான குழாயையும், தரமற்ற முறையில் போடப்பட்டு கொண்டிருக்கும் தார்சாலையையும் தர ஆய்வு செய்து, சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களையும், அதற்கு உடந்தையாக இருந்த செங்கல்பட்டு நகராட்சி அதிகாரிகளையும் உரிய விசாரணைக்கு உட்படுத்தி சட்டப்படி உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 09.06.2022 நாளிட்ட கடிதம் மூலம் செங்கல்பட்டு நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

செங்கல்பட்டு நகராட்சி ஆணையாளர் தனது 21.06.2022 நாளிட்ட அறிக்கையில் பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்:

''செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17–ல் பெரிய மணியக்கார தெருவில் ரூ.1.55 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க 11.04.2022 அன்று நடைபெற்ற நகர்மன்ற கூட்டத்தில் மேற்படி பணி ஏற்கப்பட்டு 27.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 11.05.2022–ல் திரு.K.ராஜகோபால் என்ற ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

பெரிய மணியக்கார தெருவில் தற்போது பயன்பாட்டில் உள்ள 15 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட 250 mm CC பைப் லைன் குடிநீர் பிரதான குழாய் எவ்வளவு ஆழத்தில் உள்ளது என்றும் CC பைப் லைன் அருகில் பதியப்பட்டுள்ள BSNL நிறுவனத்தின் internet கேபிள் எவ்வளவு ஆழத்தில் பதியப்பட்டுள்ளது எனவும் அதன் மீது எவ்வளவு ஆழத்தில் புதியதாக பகிர்மான குழாய் அமைக்க வேண்டி உள்ளது என்பதை உறுதி செய்ய பரிசோதனை

மேற்கொள்ளப்பட்டது. மேலும் BSNL நிறுவனத்தின் கேபிள்கள் சேதமடையாமல் பணிகள் மேற்கொள்ளவும் சாலை துண்டிப்பு செய்து பரிசோதனை பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி குடிநீர் பகிர்மான குழாய், மனுதாரர் தெரிவித்தபடி ½ அடியில் பதிக்கப்படாமல் 1 ½ அடியில் பகிர்மான குழாய்க்கு எவ்வித சேதமும் இன்றி நல்ல முறையில் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த இடத்தில் இரண்டு அடி ஆழத்தில் தொலைபேசி கேபிள்களும், 2 ½ அடி ஆழத்தில் மின்சார கேபிள்களும் மற்றும் அதற்கும் கீழாக குடிநீர் மேல்நிலை தொட்டிக்கு குடிநீர் எடுத்து செல்லும் பிரதான CC குழாய்களும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வகையான உள்கட்டமைப்புகள் ஏதும் பாதிக்காத வண்ணம் மனுதாரர் கூறும் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கப்பட்டுள்ளது. மேலும், அப்பகுதியில் குறுகலாக சாலை அமைப்பு உள்ளதால், பழைய அமைப்பில் உள்ள பைப் லைனில் குடிநீர் வராததாலும் சாலை அமைப்பதற்கு முன் புதிய குழாய் PVC பைப் லைன் பதிக்க வேண்டியதின் அவசியம் கருதி அதற்கான பணி உத்திரவு 11.05.2022 அன்று வழங்கப்பட்ட பின் புதிய பகிர்மான 110 mm PVC பைப் லைன் அமைக்கும் பணி நடைபெற்றது. மேலும் இப்பகுதியில் 1 மீட்டருக்கு மேல் தோண்டி பைப் லைன் பதிக்க முடியாததாலும், பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீர் PVC குழாய் ஆழ் பகுதியில் தோண்டி அமைக்க இயலாத காரணத்தினாலும் அவ்வாறு 1 மீட்டர் கீழ் பகுதியில் அமைக்கும்பொழுது ஏற்றம் மற்றும் இறக்கமாக உள்ள பைப்லைன்கள் அமைப்பதால் பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகிக்கப்பட இயலாத சூழ்நிலை தவிர்க்கும் பட்சத்தில் மேல் மட்டத்தில் 1 ½ அடியில் புதிய பகிர்மான 110 mm PVC பைப் லைன் அமைக்கப்பட்டது. தற்போது அப்பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு இல்லாமல் நல்லமுறையில் குடிநீர் விநியோகம் கிடைப்பதாக பொது மக்களிடமிருந்து நகராட்சிக்கு கடிதம் வரப்பெற்றுள்ளது.

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17–ல் ரூ.12.80 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்க 23.12.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 05.01.2022 அன்று திரு.ராஜேஷ் என்ற ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு, 16.05.2022 அன்று பழைய தார்சாலை ¾ அடி ஆழத்தில் தோண்டி எடுக்கப்பட்டு, Wet mix கலவை நிரவப்பட்டது. அதன் மீது 01.06.2022 மற்றும் 02.06.2022 ஆகிய தேதிகளில் புதியதாக தார்சாலை 140 மீட்டர் நீளம் மற்றும் 6 மீட்டர் அகலத்திற்கு ரூ.12.80 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தெரிவித்துள்ளபடி எவ்விதமான முறைகேடுகள், தரமற்ற பணிகள் ஏதும் நடைபெறவில்லை. பொது மக்களின் குடிநீர் தேவைக்காக புதியதாக பைப் லைன்கள் அமைக்கும் பணிகளும், பொது மக்களின் அன்றாட போக்குவரத்து பயன்பாட்டிற்காக புதியதாக தார்சாலையும் நல்ல முறையில் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் செங்கல்பட்டு நகராட்சி ஆணையரும் 23.06.2022 அன்றைய விசாரணைக்கு ஆஜராகுமாறு 09.06.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.K.பாலாஜி, 09.06.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வரும் தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17, பெரிய மணியக்கார தெருவில் ரூ.1.55 இலட்சம் செலவில் புதிய குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க அதற்கான ஒப்பந்தபுள்ளி செங்கல்பட்டு நகராட்சியால் கோரப்பட்டது. ஆனால் அதற்கான ஒப்பந்ததாரரை நகராட்சி மன்றத்தில் இறுதி செய்யப்படாமல், ஒரு குறிப்பிட்ட ஒப்பந்ததாரர் மூலம் ½ அடியில் தரமற்ற குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இதே வார்டில் ரூ.12 இலட்சம் செலவில் சுமார் 100 மீட்டர் நீளத்தில் தார்ச்சாலை அமைத்திட ஒரு குறிப்பிட்ட ஒப்பந்ததாரருக்கு அளிக்கப்பட்டது. ஒப்பந்ததாரரால் பணி மேற்கொள்ளப்பட்ட இச்சாலை மிகவும் தரமற்றதாக போடப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு பணிகளில் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க பணி ஆணை (Work Order) வழங்கப்படாமலேயே, செங்கல்பட்டு நகராட்சி அலுவலர்களின் உதவியுடன் நடைபெற்றுள்ளதால், இதற்கு காரணமான நகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 10.5.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தைச் கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் செங்கல்பட்டு நகராட்சி உதவி பொறியாளர் ஆகியோர் 23.06.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்:

“செங்கல்பட்டு நகராட்சி ஆணையரான த. மல்லிகா மற்றும் உதவி பொறியாளரான G.S. சோபனா ஆகிய நாங்கள் இருவரும் முறையே கடந்த 25 நாட்களாகவும், 5 மாதங்களாகவும் செங்கல்பட்டு நகராட்சியில் பணியாற்றி வருகிறோம்.

மனுதாரரின் புகார் மனுவில் கண்டுள்ள செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண் 17ல், 15 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட CC பைப் லைன் குடிநீர் பிரதானக் குழாய்க்கு மேல் BSNL internet Cable செல்கிறது. மேற்கண்ட இன்டர்நெட் கேபிளுக்கு மேல் குடிநீருக்கான பைப் லைன் போடுவதற்கும், மேற்கண்ட இடத்தில் உரிய பரிசோதனைகள் செய்யப்பட்டு, ரூ.1.55 இலட்சம் மதிப்பீட்டில் புதிய குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க 11.04.2022 அன்று மாமன்ற கூட்டத்தில் தீர்மானம் இயற்றப்பட்டு, 27.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அதற்கான பணி ஆணை 11.05.2022–இல் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. குடிநீர் குழாய் பதிக்கும்போது 1 ½ அடி ஆழத்திற்கு பள்ளம்தோண்டி குடிநீர் குழாய்கள் சுமார் 140 மீட்டருக்கு பதிக்கப்பட்டது. அவை தற்போது நல்லமுறையில் இயங்கிவருகிறது.

அதே போன்று ரூபாய் 12.80 இலட்சம் செலவில் மேற்கண்ட வார்டில் தார்ச்சாலை அமைக்க 23.12.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 05.01.2022 அன்று ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு 02.06.2022 அன்று 140 மீட்டர் நீளம் மற்றும் 6 மீட்டர் அகலத்திற்கு புதியதாக தார்ச்சாலை போடப்பட்டது. உரிய அலகுகளுடன் போடப்பட்ட மேற்கண்ட சாலை

அமைக்கும்போது எவ்வித முறைகேடும் நடைபெறாமல் போடப்பட்டது என்றும், மேற்கண்ட சாலை தற்போது பயன்பாட்டில் உள்ளதென்பதை இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துக்கொள்கிறோம். சாலை போடப்பட்டதற்கான தொகையை இன்னும் ஒப்பந்ததாரருக்கு அளிக்கப்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். சாலை அமைத்தது தொடர்பான புகைப்படங்களை இன்னும் ஓரிரு நாட்களில் இம்முறைமன்றத்தில் சமர்பிக்கிறோம் என தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நேர்வு தொடர்பாக செங்கல்பட்டு நகராட்சி ஆணையரின் 21.6.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படியும் இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளார்கள்.

**(6)** முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், செங்கல்பட்டு நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் செங்கல்பட்டு நகராட்சியின் உதவி பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பெரிய மணியக்கார தெருவில் புதியதாக 110 mm PVC பைப் லைன் குடிநீர் பகிர்மான குழாய் அமைப்பதற்கு செங்கல்பட்டு நகராட்சி மன்றத்தின் அனுமதியினை 11.04.2022 அன்று பெறப்பட்டு, அதற்கான ஒப்பந்தப்புள்ளி 27.04.2022 அன்று கோரியதன் தொடர்ச்சியாக, குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.1.55 இலட்சம் குறிப்பிட்டு வழங்கிய ஒப்பந்ததாரருக்கு 11.05.2022 அன்று பணி ஆணையினை செங்கல்பட்டு நகராட்சி ஆணையரால் வழங்கப்பட்டுள்ளதன் மூலம், மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளில் உண்மைத்தன்மை இல்லை என ஆவணங்களின் மூலம் உறுதியாகிறது. மேற்காணும் பெரிய மணியக்கார தெருவில் 2 அடி ஆழத்தில் தொலைபேசி கேபிள்களும், 2 ½ அடி ஆழத்தில் மின்சார கேபிள்களும், அதற்கும் கீழே குடிநீர் மேல்நிலை தொட்டிக்கு குடிநீர் எடுத்து செல்லும் வகையில் பிரதான CC குழாய்களும் அமைக்கப்பட்டுள்ள நிலையில், இந்த உட்கட்டமைப்புகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் உரிய பரிசோதனைகள் மேற்கொண்டு, 17வது வார்டில் உள்ள குடியிருப்பு மக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்கிடும் பொருட்டு, புதியதாக 110 mm PVC பைப் லைன் குடிநீர் பகிர்மான குழாயினை சாலையில் 1 ½ அடி ஆழத்தில் அதாவது தொலைபேசி கேபிள்கள் அமைக்கப்பட்டதற்கு மேல் அமைக்கப்பட்டுள்ளது என்பதை நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த புகைப்படங்கள் வாயிலாக தெரிய வருவதன் மூலம் மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்தபடி, ½ அடி ஆழத்தில் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.

மேலும் செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட சின்னமணியக்காரர் சந்திப்பு சாலை முதல் பெரிய மணியக்காரர் சந்திப்பு வரையுள்ள சாலைக்கு புதியதாக தார்சாலையினை 140 மீட்டர் நீளம் மற்றும் 6 மீட்டர் அகலத்திற்கு அமைக்க செங்கல்பட்டு நகராட்சியால் 23.12.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதில் ரூ.12.80 இலட்சம் என குறிப்பிட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி

வழங்கிய திரு. ராஜேஷ் என்ற ஒப்பந்ததாரருக்கு 05.01.2022 அன்று பணி ஆணையினை வழங்கப்பட்டதன் மூலம் மனுதாரரால் புகாராக தெரிவித்துள்ள ஒரு குறிப்பிட்ட ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளப்படவில்லை என்பதும் ஆவணங்களின் மூலம் புலனாகிறது. மேலும் இச்சாலையில் வாகனங்கள் மற்றும் பொது மக்களும் எவ்வித இடையூறுமின்றி சென்று வரும் வகையில் தரமான புதிய தார்சாலையினை 02.06.2022 அன்று அமைக்கப்பட்டுள்ளதை ஆணையர் சமர்ப்பித்துள்ள அறிக்கை மற்றும் புகைப்படங்கள் மூலம் தெளிவாகிறது.

எனவே, செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17, பெரியமணியக்காரத் தெருவில் புதியதாக PVC பைப் லைன் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கப்பட்ட பணியிலும் மற்றும் தார்சாலை போடப்பட்ட பணியிலும் செங்கல்பட்டு நகராட்சியில் முறைகேடுகள் நடந்ததற்கான எவ்வித உறுதியான ஆதார ஆவணங்களை மனுதாரரால் அளிக்கப்படாத நிலையில், செங்கல்பட்டு நகராட்சி ஆணையரின் அறிக்கையினை ஏற்று, இம்முறையீட்டு மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 28–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//.
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.K.பாலாஜி,
கதவு எண்.11/97, பெரியமணியகார தெரு,
செங்கல்பட்டு நகரம், செங்கல்பட்டு மாவட்டம் 603 001.

2) ஆணையாளர், செங்கல்பட்டு நகராட்சி,
செங்கல்பட்டு 603 002.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

29/6/22

செயலாளர்.

29/06/22